ரூபாயை நிதியாகத் தருவதற்கு மைய அரசு முன் வந்திருக் கிறது. பொதுப் பட்டியலுக்கு கல்வியை எடுத்துச் சென்று விட்டு, நிதியுதவியை அதற்கு பெருவாரியாகத் தர மைய அரசு தயக்கம் காட்டினால் புதிய கல்வித் திட்டம் நடைமுறையில் ஈடேறாது, செம்மையாக நடைபெறாது என்று கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களுமே மைய அரசிற்குத் தெளிவுபடுத்தி இருக்கின்றன. மைய அரசை தமிழகம் உள்பட பல மாநிலங்கள் வற்புறுத்தியும் வருகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக் கழக பி.பி.ஏ. பட்டம்.

157—(* வினா எண் 8627) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், பி.பி.ஏ., பட்டப்படிப்பு படித்தவர்கள் வேறு பல்கலைக் கழகங்களில் எம்.ஏ., எம்.எஸ்சி., போன்ற முதுநிலை பட்ட வகுப்புகளில் சேர முடியாமல் தவிப்பது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிவாளர் தந்த தகவல்படி பி.பி.ஏ. படிப்பு, தொழிற் சார்ந்த படிப்பாகும் என்றும் இப்படிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் பாடங்களாக இல்லாததால் அவர்கள் முதுகலை மற்றும் முது அறிவியல் படிக்க இயலாது என்றும் அவர்கள் M.B.A. வுக்கு மட்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்றும் கூறப் படுகிறது.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பயிற்று விக்கப்படுகிற பல்வேறு பாடங்களில் இந்த பி.பி.ஏ.யும் ஒன்றாகும். பொதுவாக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பயில்கிற மாணவர்களுடைய தரத்தை, மற்ற பல்கலைக்கழகங்கள் ஒப்பிடுகிறபோது, அவரவர் பல்கலைக்கழகங்களின் மதிப்

1987 நவம்பர் 17]

பெண்களை முதலாவது போட்டுக்கொண்டு, மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவர்கள், 90 விழுக்காடுக்கும் அதிகமாகவே மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் அவர்களைக் கடைசியிலேயே வைத்து மதிப்பீடு செய்வதாக, பல்வேறு மாணவர்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. இப்படி தமிழகத்திற்குள்ளேயே இருக்கிற பல்கலைக்கழகங்கள் ஒன்றுக்கொன்று தரம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருப்பதால் பல்வேறு மாணவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அந்த நிலையில்லாது, எல்லாப் பல்கலைக் கழகங்களின் மதிப்பெண்களையும் சரிசமமாக மதிப்பிடுகிற தன்மையை உண்டாக்க, அரசாங்கம் பல்கலைக்கழகங்களை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.பி.எ.-வைப் பொறுத்தவரைக்கும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற ஒரு பாடத்திட்ட மாகும். அங்கு மதிப்பீடு செய்கிற பணி அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேரும், மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தொடர்பு இல்லை. ஆனால் எம்.பி.எ. என்று வருகிறபோது, மேல்படிப்பு வருகிறபோது, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அங்குதான் அதிகப்படியான மதிப் பெண்களை மாணவர்கள் பெறக்கூடிய அளவிற்கு நடைமுறையில் அணுகுமுறை இருப்பதாகக் கூறப்படுகிறது. அங்குதான் அவர்கள் 'Valuation should be made stricter' என்ற நிலையை அவர்கள் எடுக்கவேண்டும் என்று மற்ற பல்கலைக் கழகங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. துணை வேந்தர்களுடைய மாநாட்டில் இதுகுறித்து பேசப்பட்டது. ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. விரைவில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

ஆயுள் தண்டனையை குறைத்தல்.

158—(*வினா எண் 15223)—திரு. கே. சுப்பராயன் : மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுள் தண்டனை என்பதை 10 ஆண்டுகளாக மாற்றி அமைக்க சட்டத் திருத்தம் செய்ய மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?